# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## June 10, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப் படைக்கு ரூ.354 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு புதி தாக 2,500 பணியிடங்கள் உருவாக் கப்படும் என்று முதல்வர் ச.ஜோசப் விஜய் அறிவித்தார். இந்த அதிரடிப் படையின் தொடக்க விழா சென்னை எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டரங்கில் நடைபெற்றது.

(i) சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப் படைக்காக முதல் கட்டமாக ரூ.354 கோடி ஒதுக்கப்படும். இந்தத் திட்டத்துக்கு இரண்டாம் கட்டமாக 2,500 புதிய பணியிடங்கள் காவல் துறையில் உருவாக்கப்படும். இந்தப் படைக்கு நவீன தொழில்நுட்பத்துடன் கருவிகள், நவீன வாகனங்கள் வழங்கப்படும். ஏற்கெனவே காவல் துறையில் செயல்படும் மகளிர் பிரிவுடன் இந்தப் பிரிவு இணைந்து செயல்படும். பெண்களுக்கு எதிரான குற்றங்களை முன்னரே கண்டறிந்து தடுக்கும் வகையில் இந்தப்படை செயல்படும் என்றார் முதல்வர்.

2. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் சட்டப்பேரவையில் இந்தியாவிலிருந்து வந்த அகதிகளுக்கான இட ஒதுக்கீட்டை ரத்து செய்யக்கோரி போராட்டம் நடைபெற்றது.

(i) தடை செய்யப்பட்ட கூட்டு அவாமி அதிரடிக் குழு (ஜேஏஏசி) சார்பில் விடுக்கப்பட்ட இந்தப் போராட்ட அழைப்பைத் தொடர்ந்து, அங்குள்ள முக்கிய நகரங்களில் கடைகள், வணிக வளாகங்கள் முழுமையாக அடைக்கப்பட்டன.

(ii) இந்தியாவிலிருந்து 1947-க்குப் பிறகு பாகிஸ்தானில் குடியேறிய அகதிகளுக்காக பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் சட்டப்பேரவையில் 12 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால், அந்த அகதிகள் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரிலேயே வசித்தால், அவர்கள் இந்த ஒதுக்கப்பட்ட இடங்களுக்குப் போட்டியிட தகுதியற்றவர்கள் ஆகின்றனர். பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் அடுத்த மாதம் பேரவைத் தேர்தல் நடைபெறும் நிலையில், இந்த இடஒதுக்கீட்டை முற்றிலும் ரத்து செய்யக் கோரி போராட்டத்துக்கு அழைப்பு விடுககப்பட்டிருந்தது.

(iii) இந்நிலையில், பொது அமைதி மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகக் கூறி, ஜேஏஏசி அமைப்பு தடை செய்யப்பட்டது. இதையடுத்து, பிராந்தியத்தில் பல்வேறு இடங்களில் வெடித்த போராட்டங்களில் இக்குழுவினருக்கும் போலீஸாருக்கும் இடையே நடந்த மோதலில் காவலர்கள் உள்பட 20-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

(iv) பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரின் பிரதமர் ஃபைசல் மும்தாஜ் ரத்தோர், மோதல்களைக் கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு வருமாறு போராட்டக் குழுவினருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

3. பால்டிக் கடற்பகுதியில் 'நேட்டோ' கூட்டமைப்பு நாடுகள் ராணுவப் பயிற்சியை மேற்கொண்டு வரும் நிலையில், அதற்குப் போட்டியாக ரஷிய கடற்படையும் அங்கு போர்ப் பயிற்சியைத் தொடங்கியுள்ளது.

(i) ஜூன் 4 முதல் 20-ஆம் தேதி வரை நடைபெறும் நேட்டோவின் இந்த ஆண்டுக்கான மிகப் பெரிய கூட்டுப் பயிற்சியில் 15 நாடுகளைச் சேர்ந்த 20 போர்க் கப்பல்களும், சுமார் 6,000 ராணுவ வீரர்களும் பங்கேற்றுள்ளனர்.

(ii) இந்நிலையில், நேட்டோ அமைப்பில் உள்ள லிதுவேனியா-போலந்து நாடுகளுக்கு இடையே அமைந்துள்ள ரஷியாவின் கலினின்கிராட் தீபகற்ப பகுதியில் கடந்த 2 நாள்களாக இந்த ஒத்திகை நடைபெற்றது.

(iii) ரஷியாவின் பால்டிக் கடற்படைத் தலைமையகமாகக் கருதப்படும் இப்பகுதியில், 10 போர் விமானங்கள், குண்டுவீச்சு விமானங்கள், சிறிய ஏவுகணைக் கப்பல்கள் இப்பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டன.

4.காங்கோ குடியரசில் எபோலா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 101-ஆக அதிகரித்துள்ளது.

(i) இந்த நோய்த் தொற்று கடந்த மாத மத்தியில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட போதிலும், அதற்கு பல வாரங்களுக்கு முன்பே இந்நோய் பரவத் தொடங்கியதை அதிகாரிகள் தாமதமாகவே கண்டறிந்தனர்.

(ii) காங்கோவின் இதுரி, வட கிவு, தென் கிவு ஆகிய 3 மாகாணங்களில் தொற்றுப் பரவல் தீவிரமடைந்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 35 புதிதாக பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், 10 பேர் உயிரிழந்தனர். இதன்மூலம் ஒட்டு மொத்த பாதிப்பு 550-ஆகவும், உயிரிழப்பு 101-ஆகவும் அதிகரித்துள்ளது.

(iii) உள்ளூர் மக்களின் அவநம்பிக்கை மற்றும் ஆயுதக் குழுக்களின் தாக்குதல்கள் நோய் தடுப்புப் பணிகளைப் பெரிதும் முடக்கியுள்ளன. புனியா நகரில் எபோலாவால் உயிரிழந்தவர்களின் உடலை அடக்கம் செய்யச் சென்ற குழுவினர் மீது நடத்தப்பட்ட கொடூர தாக்குதலில் இருவர் படுகாயமடைந்தனர். இதுரி மாகாணத்தில் ஆயுதக் குழுக்களின் நடமாட்டம் காரணமாக மனிதாபிமான உதவிகள் மற்றும் மருத்துவக் குழுவினர் அங்கு செல்வதில் சிக்கல் நிலவுகிறது.

(iv) இதனிடையே, மற்றொரு ஆப்பிரிக்க நாடான நைஜீரியாவின் போர்னோ மாகாணத்தில் கடந்த மே மாதம் முதல் பரவத் தொடங்கிய காலரா நோய்த் தொற்றால் இது வரை 74 பேர் உயிரிழந்துள்ளனர்.

5.டிசிஎஸ் தலைவர் - சந்திரசேகரன்

6.உலகக் கோப்பை கால்பந்து- 2026

(i) டிரையோண்டா

ஒவ்வொரு முறையும் உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்காக பிரத்யேகமாக பந்துகள் வடிவமைக்கப்படும் நிலையில், இந்த ஆண்டு போட்டிக்காகவும் அவ்வாறு ‘டிரையோண்டா' என்ற புதிய பந்து வடிவமைக்கப்பட்டுள்ளது.

(ii) பெயர்:

- ‘டிரையோண்டா' என்ற ஸ்பானிஷ்வார்த்தைக்கு, 'மூன்று அலைகள்' என்பது

அர்த்தமாகும். அதாவது, கனடா, மெக்ஸிகோ, அமெரிக்கா ஆகிய 3 நாடுகள் இணைந்து போட்டியை நடத்துவதுவதை குறிக்கும் விதமாக அவ்வாறு பெயரிடப்பட்டுள்ளது.

(iii) நிறம்:

- அந்தப் பந்தில் இருக்கும் 3 நிறங்களில், பச்சை மெக்ஸிகோவையும், நீலம் அமெரிக்காவையும், சிவப்பு கனடாவையும் குறிக்கின்றன. அத்துடன் அந்த நாடுகளைக் குறிக்கும் இலச்சினையாக, கழுகு (மெக்ஸிகோ), நட்சத்திரம் (அமெரிக்கா), மேப்பிள் இலை (கனடா) ஆகியவையும் அதில் பொறிக்கப்பட்டுள்ளன.

(iv) வடிவமைப்பு:

- இந்தப் பந்து 4 பகுதிகளைக் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளது. போட்டியின் வரலாற்றில் இதுவரை பயன்படுத்தப்பட்ட பந்துகளில், இதுவே குறைந்த பகுதிகளைக் கொண்டதாகும். முக்கோணத்தை அடிப்படையாகக் கொண்ட 'டெட்ராஹெட் ரான்' என்ற வடிவத்தின் மூலமாக 4 பகுதிகள் உருவாக்கப்பட்டு, அவற்றை ஒன்றிணைப்பதன் மூலமாக பந்து முழு வடிவம் பெறுகிறது. இந்த முக்கோண வடிவமைப்பை தேர்வு செய்ததன் பின்னணியிலும், 3 நாடுகள் என்பதே உள்ளது. தங்கத்தாலான சாம்பியன் கோப்பையை பிரதிபலிக்கும வகையில், பந்தின் வடிவமைப்பிலும் தங்க நிறம் இழைந்தோடுகிறது.

(v) தொழில்நுட்பம்:

- இந்தப் பந்தின் உள்ளே, நுட்பமான உணரி (சென்ஸார்) பொருத்தப்பட்டுள்ளது. பந்தின் ஒவ்வொரு அசைவும் இதன் மூலம் பதிவாகிறது. 'வார்' எனப்படும் காணொலி உதவி நடுவருக்கு தேவையான தகவல்களை இந்த உணரி வழங்குகிறது. பந்து ஒவ்வொரு முறை தொடுதலுக்கு உள்ளாகும்போதும் அந்த உணரி சமிக்ஞைகளை அனுப்பும் என்பதால், கள நடுவரால் கண்டறிய முடியாத சிக்கலான ஹேண்ட்பால்', ஆஃப் சைடு கோல்' போன்ற பல சர்ச்சைகளுக்கு இந்தப் பந்து தீர்வளிக்கிறது. இந்தத் தொழில்நுட்பங்கள் செயல்படு வதற்காக, ஒவ்வொரு ஆட்டத்துக்கு முன்பாகவும் பந்து மின்னேற்றம் ('சார்ஜ்') செய்யப்படுகிறது.

(vi) சிறப்பு:

- ஈரம் பட்டால் வழுக்கிக் கொண்டு செல்லாத வகையிலும், காற்றில் பறந்து செல்லும் போது வேகத்தால் திசை மாறாமல் சீரான பாதையில் செல்லும் வகையிலும் இந்தப் பந்து வடிவமைக்கப்பட்டுள்ளது. அது அடையும் இடத்தை துல்லியமாக கணிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

7.உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் நடுவராகச் செயல் பட இருந்த சோமாலிய நடுவர் ஓமர் அர்டன் தங்கள் நாட்டில் நுழைய அமெரிக்கா அனுமதி மறுத்தது. இதையடுத்து போட்டிக்கான நடுவர் பட்டியலில் இருந்து ஃபிஃபாவும் அவர் பெயரை நீக்கியது.

(i) உலகக் கோப்பை போட்டியில் பணியாற்றும் முதல் சோமாலிய நடுவராக சாதனை படைக்க இருந்தார் ஓர் அர்டன். ஆப்பிரிக்க கண்டத்தில் சிறந்த கால்பந்து நடுவராக 2025-இல் தேர்வான அவர், 2 மாதங்களுக்கு முன்பே ஃபிஃபா வெளியிட்ட உலகக் கோப்பை

போட்டிக்கான நடுவர் பட்டியலில் சேர்க்கப்பட்டார்.

(ii) போட்டிக்காக கடந்த வாரம் நுழைவு இசைவை பெற்ற அவர், அமெரிக்கா வந்தபோது மியாமி விமான நிலையத்தில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அதற்கான உரிய காரணத்தை, அமெரிக்காவின் சுங்க மற்றும் எல்லைப் பாதுகாப்பு பிரிவு தெரிவிக்கவில்லை.

(iii) இந்த விவகாரத்தில் எந்த வொரு முன்னெடுப்பும் செய்யாத ஃபிஃபா, ஓமர் அர்டனை போட்டியிலிருந்து விடுவித்தது. எனினும், அமெரிக்காவில் சட்ட விரோத குடியேறுவதை தவிர்ப்பதற்காக டிரம்ப் நிர்வாகம் பயண கட்டுப்பாடுகள் விதித்த சில நாடுகளில் சோமாலியாவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

8.அதிகஅளவில் பூச்சிக்கொல்லி மருந்துகள் கலந்திருப்பதாகக் கூறி இந்தியாவில் இருந்து மாம்பழங்களை இறக்குமதி செய்ய நேபாளம் கட்டுப்பாடு விதித்துள்ளது. இதனால், அங்கு உள்நாட்டு மாம்பழங்களின் விற்பனை அதிகரித்துள்ளது. இது தொடர்பாக அந்நாட்டின் மாதேஷ் மாகாண வேளாண்மை கூட்டுறவு, நில மேலாண்மை அமைச்சக தகவல் தொடர்பு அதிகாரி அஜய் கியாவாலி கூறியதாவது:

(i) இந்திய மாம்பழங்களில் அதிக அளவில் பூச்சிக்கொல்லி மருந்து கலப்பு இருப்பது கண்டறியப்பட்டது. எல்லையில் அது தொடர்பான சோதனைகள் நடத்த போதுமான வசதிகள் இல்லை. எனவே, இந்திய மாம்பழங்களை இறக்குமதி செய்ய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

(ii) இப்போதைய கட்டுப்பாடுகள் மூலம் நேபாள மாம்பழங்களின் விற்பனை அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் நாடு முழுவதும் விற்பனை செய்ய உள்நாட்டு விளைச்சல் போதுமான தாக இல்லை என்றார்.

9.ஹெச்-1பி நுழைவு இசைவு (விசா) கட்டணத்தை ஆண்டுக்கு ஒரு லட்சம் டாலராக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உயர்த்தியதை ரத்து செய்து அமெரிக்க உயர் நீதிமன்றம் அதிரடி உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

(i) 'அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறாமல் ஹெச்-1பி நுழைவு இசைவு கட்டணத்தை உயர்த்தியது சட்டவிரோதமானது' என்றும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

(ii) உலகம் முழுவதும் இருந்து திறமையான தொழில்நுட்ப நிபுணர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு அதிக ஊதியத்துடன் அமெரிக்காவில் வேலை வழங்க ஹெச்-1பி நுழைவு இசைவு நடைமுறையை அந்நாட்டு நிறுவனங்கள் பயன்படுத்தி வருகின்றன. இந்தத் திட்டத்தின் மூலம் அமெரிக்கா சென்று தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏராளமான இந்தியர்கள் பணியாற்றி வருகின்றனர். இதில், சிறப்பாகப் பணியாற்றுபவர்கள் நிரந்தரக் குடியுரிமை பெற 'கிரீன்கார்டு' வழங்கப்படும் வாய்ப்புள்ளது.

(iii) இந்தச் சூழலில், அமெரிக்க வேலை வாய்ப்பில் அமெரிக்கர்களுக்கு முன்னுரிமை என்ற கொள்கையின் கீழ், ஹெச்-1பி நுழைவு இசைவு கட்டணத்தை அமெரிக்க அதிபர் டிரம்ப் பல மடங்காக உயர்த்தி கடந்த ஆண்டு செப்டம்பரில் உத்தரவிட்டார்.

(iv) அதன்படி, 2,000 முதல் 5,000 டாலராக இருந்த ஹெச்-1பி நுழைவு இசைவு கட்டணத்தை, ஆண்டுக்கு ஒரு லட்சம் டாலர் என்ற அளவில் உயர்த்தி உத்தரவிட்டார். இந்தக் கட்டண

உயர்வு கடந்த ஆண்டு செப்டம்பர் 21-ஆம் தேதி முதல் அமலுக்கு வந்தது.

(v) இதற்கு, அமெரிக்காவின் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உள்பட பல்வேறு நிறுவனங்கள் சார்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. ஏனெனில், ஹெச்-1பி நுழைவு இசைவு கட்டணத்தை பொதுவாக அமெரிக்க நிறுவனங்களே செலுத்தி, வெளிநாடுகளைச் சேர்ந்த தகுதியான நபர்களை பணிக்குத் தேர்வு செய்கின்றன.

(vi) இந்தக் கட்டண உயர்வுக்கு எதிராக அமெரிக்காவின் 20 மாகாணங்களைச் சேர்ந்த குழுக்கள் சார்பில் மாஸசூசெட்ஸ் மாகாணம் பாஸ்டனில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு மாவட்ட நீதிபதி லியோ சோரோகின் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

(vii) அப்போது, 'அமெரிக்க அதிபர் டிரம்ப் அரசு குடியேற்றக் கொள்கை மற்றும் வரிகளை நிர்ணயிப்பதில் நாடாளுமன்றத்துக்கு உள்ள அதிகாரத்தை அபகரித்துள்ளது' என்று மனுதாரர்கள் வாதிட்டனர்.

(viii) இதை ஏற்ற நீதிபதி, 'டிரம்ப் நிர்வாகம் நிர்ணயித்துள்ள ஒரு லட்சம் டாலர் தொகை எவ்வாறு அழைக்கப்பட்டாலும், அது ஒரு வரிவிதிப்பு என்பதையே வெளிப்படுத்துகிறது. அந்த வகையில், நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறாமல் ஹெச்-1பி நுழைவு இசைவு நடைமுறை மீது இந்த வரி விதிப்பு செய்யப்பட்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது. இது சட்டவிரோதம். எனவே, ஹெச்-1பி நுழைவு இசைவு கட்டணத்தை ஒரு லட்சம் டாலராக உயர்த்தியது ரத்து செய்யப்படுகிறது' என்று தீர்ப்பளித்தார்.

10.பிரான்ஸ், ஸ்லோவாகியா ஆகிய நாடுகளில் ஜூன் 13 முதல் 19 வரை பிரதமர் நரேந்திர மோடி அரசுமுறைப் பயணம் மேற்கொள்ளவிருக்கிறார்.

(i) பிரான்ஸில் நடைபெறும் ஜி7 நாடுகள் உச்சிமாநாட்டில் அவர் பங்கேற்கவுள்ளார். மத்திய ஐரோப்பிய நாடான ஸ்லோவாகியா கடந்த 1993-இல் சுதந்திரம் பெற்ற பிறகு அந்நாட்டுக்கு பயணிக்கும் முதல் இந்தியப் பிரதமர் என்ற பெருமை மோடிக்கு கிடைக்கவுள்ளது. இது தொடர்பாக வெளியுறவு அமைச்சகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

- தனது பயணத்தின் முதல்கட்டமாக, பிரான்ஸின் நைஸ் நகருக்கு ஜூன் 13-இல் சென்றடையும் பிரதமர் மோடி, மறுநாள் அந்நாட்டின் அதிபர் இமானுவல் மேக்ரானுடன் இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்துகிறார்.
- இந்திய-பிரான்ஸ் உறவுகள் அண்மையில் உலகளாவிய சிறப்பு உத்திசார் கூட்டுறவு அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்ட நிலையில், பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து ஆலோசிக்கவுள்ளனர்.
- இந்தியா, பிரான்ஸ் மற்றும் பிற நாடுகளின் புத்தாக்க நிறுவனங்களையும், துணிகர மூலதன நிதியங்களையும் ஒருங்கிணைக்கும் நோக்கில் நைஸ் நகரில் இந்தியா சார்பில் நடத்தப்படும் 'பாரத் இன் னோவேட்ஸ்' நிகழ்ச்சியை இரு தலைவர்களும் தொடங்கிவைக்கவுள்ளனர்.
- பின்னர், ஸ்லோவாகியாவுக்கு ஜூன் 14-ஆம் தேதி பயணமாகும் பிரதமர் மோடி, ஜூன் 16-ஆம் தேதி வரை பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார்.
- மீண்டும் பிரான்ஸ் திரும்பும் அவர், ஏவியன் நகரில் ஜூன் 16, 17 ஆகிய தேதிகளில் நடைபெறும் ஜி7 உச்சிமாநாட்டில் பங்கேற்கவுள்ளார். இந்த மாநாட்டையொட்டி,

பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். ஜூன் 18, 19 ஆகிய தேதிகளில் பாரீஸ் நகரில் பயணம் மேற்கொண்டு, ஐரோப்பிய ஒன்றியத்தின் மிகப் பெரிய தொழில்நுட்ப மாநாட்டில் (விவாடெக்) பங்கேற்கவுள்ளார் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

11.125 நாள் வேலைத் திட்டத்துக்காக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு ரூ.95,692 கோடியை மத்திய அரசு விடுவித்தது. இந்தத் திட்டத்தின் கீழ், தமிழகத்துக்கு ரூ.7,957.57 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(i) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு (100 நாள் வேலைத் திட்டம்) சட்டத்துக்கு மாற்றாக, விபி-ஜி ராம் ஜி (125 நாள் வேலைத் திட்டம்) மசோதா கடந்த ஆண்டு டிசம்பரில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து, அந்த மசோதா சட்டமானது.

(ii) இந்தப் புதிய சட்டத்தின்படி, 100 நாள் வேலைத் திட்டம் 125 நாள்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது; சட்டப்பேரவைகள் உள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இந்தத் திட்டத்துக்கான நிதியில் மத்திய அரசு 60 சதவீதத்தையும், மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் 40 சதவீதத்தையும் ஏற்கும்; வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் இமயமலைப் பகுதியில் உள்ள உத்தரகண்ட், ஹிமாசல பிரதேச மற்றும் ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் இந்தத் திட்டத்துக்கான நிதியில் மத்திய அரசு 90 சதவீதத்தையும், மாநில அரசுகள் 10 சதவீதத்தையும் ஏற்கும். இந்தத் திட்டம் வரும் ஜூலை 1-இல் அமலுக்கு வருகிறது.

12.வெப்ப அலைகளின் போது அதிகரிக்கும் மின்சாரத் தேவை மற்றும் பரவலாக்கப்பட்ட சூரிய ஆற்றலை நோக்கிய மாற்றம் குறித்த சவால்கள்.

(i) மின் விநியோகத்தில் வெப்ப அலையின் தாக்கம்

- நாடு முழுவதும் நிலவும் கடுமையான வெப்ப அலை, தமிழ்நாடு உட்பட அனைத்து மாநிலங்களிலும் மின் விநியோகத்தை வெகுவாகப் பாதித்துள்ளது.
- தமிழ்நாட்டின் பல்வேறு நகர்ப்புறங்களில், அடிக்கடி ஏற்படும் மின்வெட்டு பொதுமக்களிடையே அதிருப்தியையும், சாலை மறியல் போன்ற போராட்டங்களையும் உருவாக்கியுள்ளது.
- மக்களின் கோபத்தைக் கையாளவும், மின்வாரிய அதிகாரிகள் பழுதுகளை உடனடியாகச் சரிசெய்வதை உறுதி செய்யவும் சட்டமன்ற உறுப்பினர்கள் (MLAs) நேரடியாகக் களத்தில் இறங்கிச் செயல்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

(ii) உள்கட்டமைப்பு மற்றும் விநியோகச் சவால்கள்

- தற்போதைய மின்வெட்டுக்கு முக்கியக் காரணம் மின்சாரத்தின் மொத்தப் பற்றாக்குறை அல்ல; மாறாக, விநியோக முறை மற்றும் உள்கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளே இதற்குக் காரணமாகும்.
- மாலை மற்றும் இரவு நேரங்களில் உச்சகட்ட மின் பயன்பாட்டின் போது மின்மாற்றிகளில் (transformers) ஏற்படும் அதிகப்படியான சுமை (overloading), நிலத்தடி கேபிள்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் காலாவதியாகி வரும் மின் விநியோகக் கட்டமைப்பு ஆகியவை முக்கியப் பிரச்சினைகளாக உள்ளன.

- மின்சாரத் துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார், இந்தத் தொழில்நுட்ப யதார்த்தங்களை மக்களுக்கு விளக்கும் வகையில் செய்தியாளர் சந்திப்புகளை நடத்தி வருகிறார்.

(iii) தேசிய அளவில் சாதனை அளவிலான மின் தேவை மற்றும் சூரிய ஆற்றல் இடைவெளி

- இந்த ஆண்டு இந்தியாவின் மின்சாரத் தேவை 270 ஜிகாவாட் (GW) என்ற வரலாற்றுச் சாதனை அளவை எட்டியுள்ளது.
- முதன்முறையாக, மின்சாரத்தை கவனமாகக் கையாள வேண்டும் என்று மத்திய அரசு பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.
- இரவு நேர மின் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையிலான இடைவெளி ஒரு முக்கிய உத்திசார் சவாலாக அடையாளம் காணப்பட்டுள்ளது; இரவில் சூரிய ஆற்றல் உற்பத்தி பூஜ்ஜியமாகக் குறைவதால், மிகவும் நிலையான மின் கட்டமைப்பு (grid) இல்லாமல் அந்த நேரங்களில் ஏற்படும் அதிக மின் தேவையை ஈடுசெய்வது கடினமாக உள்ளது.

(iv) இந்தியாவின் ஆற்றல் கலவை மற்றும் நம்பகத்தன்மை சார்ந்த சிக்கல்கள்

- தற்போது, இந்தியாவின் ஆற்றல் உற்பத்தியில் 72% அனல் மின்சாரம், 9% நீர்மின்சாரம், 2% அணுமின்சாரம் மற்றும் 17% புதுப்பிக்கத்தக்க ஆற்றல் (காற்று மற்றும் சூரிய ஆற்றல்) ஆகியவை அடங்கியுள்ளன.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலம் கிடைக்கும் இந்த 17% மின்சாரம் "நம்பகத்தன்மையற்றது" எனக் கருதப்படுகிறது; ஏனெனில் இதன் உற்பத்தி மேகமூட்டம் அல்லது காற்றின் வேகம் போன்ற வானிலை நிலவரங்களை முழுமையாகச் சார்ந்திருக்கிறது.
- அதிக அளவிலான புதுப்பிக்கத்தக்க ஆற்றலைத் துல்லியமான முறையில் தங்கள் மின் கட்டமைப்பில் வெற்றிகரமாக ஒருங்கிணைக்கும் ஜெர்மனி போன்ற நாடுகளை இந்தியா முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும்.

(v) புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையில் தமிழ்நாட்டின் முன்னிலை

- ராஜஸ்தான், குஜராத் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களுக்கு இணையாக, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையில் இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்கிறது.
- மாநிலத்தில் சூரிய ஆற்றல் உற்பத்தித் திறனில் மிகப்பெரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது; இது மார்ச் 2022-ல் 5,067 மெகாவாட்டாக இருந்த நிலையில், ஏப்ரல் 2026-ல் 13,871 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது (174% அதிகரிப்பு).
- மேலும், மாநிலத்தில் காற்றாலை மின் உற்பத்தியானது 12,159 மெகாவாட் அளவை எட்டியுள்ளது.

(vi) தீர்வு - "ஒவ்வொரு வீட்டிலும் சூரிய ஆற்றல்" திட்டம்

- "ஒவ்வொரு வீட்டிலும் சூரிய ஆற்றல்" (Solar in Every Home) என்ற திட்டத்தை மாநில அரசு செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.
- தனிப்பட்ட வீடுகளில் சூரிய ஆற்றல் அமைப்புகளை நிறுவுவதற்குப் போதுமான மானியங்களை வழங்குவது, கோடைக்கால உச்சத் தேவையின்போது மைய மின் கட்டமைப்பின் (central grid) மீதான சுமையைக் குறைக்கவும், பொதுமக்களிடையே

அதிருப்தி அல்லது கொந்தளிப்பு ஏற்படுவதைத் தவிர்க்கவும் உதவும் என்று இது பரிந்துரைக்கிறது.

- பெண்களுக்கான உரிமைத் தொகை போன்ற சில நலத்திட்டங்களுக்கான நிதியை இத்திட்டத்திற்கு மாற்றி அமைப்பது, மாநிலத்தின் எரிசக்திப் பாதுகாப்பிற்கு நீண்ட கால அடிப்படையில் அதிக பலனளிக்கக்கூடிய முதலீடாக அமையும்.